**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். சிசி. 183/2021**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சிதம்பரம் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | சிவப்பிரகாசம் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | | **வயது :** | 58 /2023 |

**(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது. )**

17.07.2023.
**சாட்சி சத்தியபிரமாண வாக்குமூலம் செய்விக்கப்பட்டார்.**
**குறுக்கு விசாரணை:-**

1) எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்து இருந்ததா என்றால் ஆமாம். எனது அழைப்பாணையில் எது தொடர்பாக நான் சாட்சியம் அளிக்க வேண்டும் என கூறப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. இவ் அழைப்பாணை வருவதற்கு முன்பு இவ்வழக்கு தொடர்பான விபரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு ரவிச்சந்திரனை தெரியும் என்றால் தெரியும். லதாவை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு தான் லதா எனது உறவினர் என்பது தெரியும் என்றால் ஆமாம். எனக்கும் ரவிச்சந்திரனுக்கும் நட்பில் பிரச்சினை ஏற்பட்டது என்றால் ஆமாம். எப்போதிலிருந்து என்றால் 2010ல் இருந்தே. வாதிக்கு எனக்கும் ரவிச்சந்திரனுக்கும் இருந்து வரும் உறவு முறை குறித்து ஏதும் தெரியாது என்றால் தெரியாது. ம.சா.ஆ. 7ல் பதில் அறிவிப்பில் என்னை குறித்து ரவிச்சந்திரன் கூறியுள்ள விபரங்கள் குறித்து எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

2)நான் ஆவணங்கள் ஏதும் ரவிச்சந்திரனுக்கு எழுதிக் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் தேவையில்லாமல் என்னை தரப்பினராக சேர்த்து இழுத்து அடிக்கிறார்கள் என்றால் ஆமாம். நான் இவ்வழக்கு காசோலை குறித்து வேறு ஏதும் ஒப்பந்தங்கள் செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலை கொடுத்து எனக்கு விபரங்கள் ஏதும் தெரியுமா என்றால் தெரியாது.

**மறு விசாரணை :-**

இல்லை.